87 A/L
HEAT
திரு. வர்ணம்
ஆரம்பம்:
5 - 4 - 86
சனி, ஞாயிறு: 11-30—12-30
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

SOUND 86 A/L
திரு சத்தியசீலன்
ஆரம்பம்:
31 — 03 — 86
திங்கள் காலை: 7-15
திங்கள்-வெள்ளி: 7-15 8-15
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 18 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 19 (31-03-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:114

# தமிழர் படுகொலை: மீண்டும் இந்தியா கவலை, ஆட்சேபம்

## ஜனாதிபதி - டிக்ஸிற் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டதாக தகவல்

— உதயன் சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மார்ச் 31

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியா மீண்டும் கவலையும் ஆட்சேபமும் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கவலையை கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் நேரில் வெளியிட்டார்.

மார்ச் 27ஆம் திகதி திரு. ஜெயவர்த்தனவை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசினர் அச்சமயம் இலங்கை இனப்பிரச்சினையில் காணப்படும் முன்னேற்றம் குறித்து இருவரும் பேசிக்கொண்டனராம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர் நிலை வரவர மோசமாகிக்கொண்டு வருகிறது பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் சூழ்நிலை இன்னும் இலங்கையில் உருவாகவில்லை

தொடர்ந்து தமிழர் கொல்லப்படுவது இந்தியாவுக்குக் கவலை தருகிறது படுகொலையை ஆட்சேபிக்கிறது.

நிலைமையைச் சீராக்கி பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் சூழ்நிலையை இலங்கை உருவாக்க வேண்டும்.

— இப்படி திரு. டிக்ஸிற் திரு. ஜெயவர்த்தனவைக் கேட்டுக்கொண்டதாக உதயனுக்கு மிகவும் நம்பிக்கையாகத் தெரியவந்தது.

## கூட்டணி ஒரு போதும் ஏற்க மாட்டாது
### — நீலன்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண யூனியன் பிரதேச அந்தஸ்து கொண்ட அமைப்பு எதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்காது.

இப்படி வட்டுக்கோட்டைத் தொகுதியின் முன்னாள் எம்.பியும் கூட்டணிப் பிரமுகருமான டாக்டர் நீலன் திருச்செல்வம் உதயனுக்குச் சொன்னார்.

யூனியன் பிரதேச அந்தஸ்து உள்ள அமைப்புகளை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிறுவ வகை செய்யும் புதிய யோசனைகளை இலங்கை அரசு உருவாக்கியுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்திபற்றி கருத்துத் தெரிவிக்கையில் டாக்டர் திருச்செல்வம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் நீலன் திருச்செல்வம் உதயனுக்குக் கூறியதாவது:-

ஜனாதிபதி ஜெயவர்த்தன டில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்கள் நடத்திய சமயம், தமிழ்ப் பகுதிகளுக்கு யூனியன் பிரதேச அந்தஸ்து (பாண்டிச்சேரி போன்று) வழங்குவது பற்றியும் பேசினர்.

ஆனால் தமிழர் விடுதலைக்கூட்டணி அப்போதே அந்த யோசனையை நிராகரித்து விட்டது

இந்தியாவில் உள்ள முழு சுயாட்சி நிறைந்த மாநில அந்தஸ்து கொண்ட வடக்கு - கிழக்கு இணைந்த ஒருமொழி மாநில அமைப்புத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கை.

இதைத் தவிர வேறு எந்த யோசனையையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை.

இப்படி டாக்டர் நீலன் திருச்செல்வம் சொன்னார்.

## யூனியன் அமைப்பா? அதுபற்றி ஜனாதிபதி எதுவுமே வெளியிடவில்லை!

கொழும்பு, மார்ச் 31

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யூனியன் பிரதேச அந்தஸ்துகொண்ட அமைப்புக்கள் நிறுவப்படுவதுபற்றிய அறிகுறிகள் பேச்சுக்களின்போது தென்படவில்லை.

மார்ச் 27இல் நடந்த ஜெயவர்த்தன - டிக்ஸிற் சந்திப்புப்பற்றி தகவல் வெளியிடுகையில் இந்திய தூதரக வட்டாரங்கள் மேற்கண்டவாறு தெரிவித்தன.

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் மார்ச் 27ஆம் திகதி ஜனாதிபதியையும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இனப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வு ஒன்றைக்காண அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி திரு. டிக்ஸிற், திரு. ஜெயவர்த்தனவை அச்சந்திப்பின்போது கேட்டுக்கொண்டதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு பண்டாரி, ஏப்ரல் 20ஆம் திகதி இலங்கை வருவார் என்ற ஏஜன்ஸிச் செய்தி ஒன்று குறித்துக் கேட்டபோது —

இந்திய அரசிடம் இருந்து உத்தியோக பூர்வமான தகவல்கள் எதுவும் அது சம்பந்தமாகக் கிடைக்கவில்லை என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றை கடந்த சனிக்கிழமை சந்தித்துப் பேசினர். சுமார் ஒருமணித்தியாலம்வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

## இந்தியாவை 'தாஜா' செய்ய ஒரு தந்திரம் இது!

கொழும்பு, மார்ச்31

இந்தியாவின் 'கடும்போக்கை' தளர்த்தும் ஒரு நடவடிக்கை தான் இலங்கை அரசின் யூனியன் பிரதேச அந்தஸ்து கொண்ட அமைப்புக்களை உருவாக்கும் புதிய யோசனைகள். இப்படி இலங்கை அரசில் மிகச் செல்வாக்குப் பெற்ற பிரமுகர் ஒருவர் சொன்னர்.

பிரதமர் ராஜீவ் காந்தியை எப்படியாவது "தாஜா" செய்து சமாளிக்கலாம் என்று பார்க்கின்றார்கள். ஆனால் அது நடைபெறக் கூடிய காரியமா? என்பது சந்தேகமே! இப்படி அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.

### தாதிகள் வேலைநிறுத்தம்
## கொழும்பில் தினமும் 400 சத்திர சிகிச்சைகள் ரத்துச் செய்யப்படுகின்றன

கொழும்பு, மார்ச் 31

தாதிமார்களின் வேலை நிறுத்தத்தினால் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் தினமும் 400 சத்திரசிகிச்சைகள் ரத்துச் செய்யப்படுகின்றன.

இதனிடையில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கடந்த சனிக்கிழமை கூடி தாதிமார் வேலை நிறுத்தத்தினால் எழுந்துள்ள நிலைமை பற்றி ஆராய்ந்தது.

தாதிமார் வேலை நிறுத்த விஷயத்தில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பிழையானவை என்று கண்டிக்கும் அறிக்கை ஒன்றை சங்கம் பின்னர் வெளியிட்டது.

கொழும்பு பெரியாஸ்பத்திரி விடுதிகளில் இருந்து வேலை நிறுத்தம் செய்யும் 161 தாதிகளின் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன.

அதே நேரத்தில் அரசு சார்பற்ற 21 தொழிற் சங்கங்கள் அடையாள வெளிநடப்பு ஒன்றை திங்கட்கிழமை (இன்று) மேற்கொள்ளக்கூடும் என்று தெரிகிறது.

### அமைதியாக அனுஷ்டிக்கப்பட்ட ஈஸ்ரர் ஞாயிறு

நல்லூர், மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மக்கள் உயிர்த்த ஞாயிறு தினத்தை (ஈஸ்ரர் ஞாயிறை) மிகவும் அமைதியாகவும் பக்திபூர்வமாகவும் அனுஷ்டித்தனர். கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட வழிபாடுகள் நடத்தப் பெற்றன.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் ஞாலம் புது வாழ்வும் அமைதியும் அடையும் என்ற நோக்கில் கிறிஸ்தவர் வேண்டுதலைச் செய்தனர்.

மேலும் திருப்பலி பூஜைகள் ஆராதனைகள் அமைதியான முறையில் நடைபெற்றன.

## வந்தாறுமூலையில் நடந்த தேடுதலில் 2பேர் பலி; ஒருவர் காயம்
### விசேட சேவை அதிகாரியின் சடலம் எங்கே?

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நேற்றுக் காலை ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலில் இரண்டு தமிழர் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்கள். ஒருவர் காயமடைந்தார். அவர்கள் வந்த டிராக்டர் எரிக்கப்பட்டது

இறந்தவர்களில் ஒருவர் விசேடசேவை அலுவலராகப் பணிபுரிந்து வந்த இ. சத்தியநாதன். வயது 25

மற்றவர் எஸ் பாலன், வயது 28. ஜூலை கலவரத்தில் இடம்பெயர்ந்து மட்டக்களப்புக்கு வந்தவர்

டிராக்டர் சாரதியான ஏரம்பு (வயது 23) காயம் அடைந்தார், அவர் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சத்தியநாதனின் சடலம் காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

காலை 11 மணியளவில் சந்திவெளி முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் மினிபஸ் மூலம் வந்தாறுமூலை அம்பலத்தடிப் பிள்ளையார் ஆலயம்வரை வந்தனர்.

அவ்விடத்தில் சைக்கிள்களில் கிராமவாசிகள் சிலர் வந்துகொண்டிருந்தனராம்.

அவர்களின் சைக்கிள்களை வாங்கிய சிப்பாய்கள் அவற்றில் ஏறி ஊருக்குள் நுழைந்தனர்.

அந்நேரம் அறுவடையை முடித்துக்கொண்டு சாப்பாடு எடுக்கச் சிலர் டிராக்டரில் எதிரே வந்துகொண்டிருந்தனர்.

இடையில் சைக்கிளில் வந்த ஊர்வாசி ஒருவர் சிப்பாய்களைக் கண்டுவிட்டு ஓடத் தொடங்கினராம்.

சிப்பாய்கள் அந்த நபரைக் கலைத்துப் பிடிக்க முயற்சித்தனராம்.

துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனராம் அப்போதே டிராக்டரில் வந்த விசேட சேவை அலுவலர் சத்தியநாதனும் பாலனும் மரணமானார்கள்.

அவர்கள் வந்த டிராக்டர் எரிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது ஆனால் சத்தியநாதனின் சடலத்தைக் காணவில்லை.

இது சம்பந்தமாக மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

## கடல் ரோந்து விஸ்தரிப்பு; மேலதிக பீரங்கிப் படகுகள்
## மக்கள்மீது இரக்கம்காட்ட முடியாது
### கடற்படை அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 31

கடற்கண்ணி வெடிக்கு பயந்து கடற்படையினர் கடல் ரோந்துகளை நிறுத்தப்போவது இல்லை மேலதிக ரோந்து பீரங்கிப் படகுகள் கடல் ரோந்தில் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இப்படி கடற்படை உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் அச்சமின்றி வாழ்வது தீவிரவாதிகளைப் பொறுத்த விடயம்.

தீவிரவாதிகளின் செயல்களுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க கடற்படையினர் தயாராகிவிட்டனர்

இதனால் மக்களுக்கு ஏற்படும் எதிர்பாராத உயிர்ச் சேதம், உடைமை பொருள்சேதம் ஆகியவற்றுக்கு ஆயுதப் படையினர் பொறுப்பாளிகள் அல்லர்.

கரையோரப் பகுதிகளில் வாழும் குடிமக்களுக்காகவே கடற்படையினர் இதுவரை பொறுமையைக் கடைப்பிடித்து வந்தனர்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க கடற்படை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது அது சம்பந்தமான கண்டிப்பான உத்தரவு கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடகுதி முகாமைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் தீவிரவாதிகளின் நடவடிக்கை பற்றி முன்கூட்டியே உடனுக்குடன் தகவல் தரவேண்டும்.

கடற்படையினரின் பதில் தாக்குதலில் இருந்து தப்ப, கரையோரப் பகுதி மக்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறிவிட வேண்டும்.

இனிமேல் எச்சந்தர்ப்பத்திலும் மக்கள் மீது இரக்கம் காட்டமுடியாத கட்டம் வந்துவிட்டது

— இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார்.



இவ்வளவு காலமும் ஏதோ தமிழ் பொதுமக்களில கரிசினை காட்டித்தான் தங்கடை இராணுவ நடவடிக்கையளை குறைச்சு வைச்சிருந்த மாதிரி நாளுக்கு ஒரு அறிக்கை விடுகினம். உதில எண்டா ஏதோ மர்மம் கட்டாயம் இருக்கு.....!

### சுபநேரம்

31- 3- 1986

திங்கட்கிழமை

சுபநேரம்:
12 12 முதல் 1.42 வரை
ராகுகாலம்:
7.42 முதல் 9 12 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### அத்துல்கமவில் சிங்களக் குடும்பங்கள்

கொழும்பு, மார்ச் 31

வவுனியாவில் வன்செயல்களால் இடம் பெயர்ந்த சுமார் 100 சிங்களக் குடும்பங்களை, மிகுந்தலைத் தேர்தல் தொகுதியில் அத்துல்கம என்ற இடத்தில் நிரந்தரமாகக் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## றேகன் நிராகரிப்பு

வாஷிங்டன், மார்ச் 30

அணு ஆயுதத் தடை தொடர்பாக அமெரிக்கத் தலைவருடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த ரஷ்ய அதிபர் கோர்பச்சேவ் விடுத்த வேண்டுகோளை அமெரிக்க ஜனாதிபதி றேகன் இன்று நிராகரித்தார்.

தமது நாடு அணு ஆயுதப் பரிசோதனைத் திட்டங்களை தொடர்ந்து நடத்தும் என்றும் அவர் அறிவித்தார்.

(முன்வந்த செய்தி இரண்டாம் பக்கத்தில்)

### சமரச முயற்சி

கொழும்பு, மார்ச் 31

வேலைநிறுத்தம் செய்யும் தாதிகளுக்கும் அரசுக்கும் இடையே சமரசம் செய்து வைக்கும் முயற்சிகளை முன்னாள் சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா மேற்கொண்டிருந்தார்.

அம் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததாக தற்பொழுது தெரியவந்துள்ளது.

## யாழ்.ஆஸ்பத்திரி இன்று வழமைக்கு
### வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

நல்லூர், மார்ச் 31

யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்களின் வேலை நிறுத்தம் நேற்று கைவிடப்பட்டது

கடத்திச் செல்லப்பட்ட சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கிருஷ்ணராஜாவின் கார் கைவிடப்பட்ட நிலையில் றக்கா றோட் சந்தியில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

டாக்டர் வி. கிருஷ்ணராஜாவின் கார் கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதை ஆட்சேபித்து கடந்த இரண்டு தினங்களாக டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர் என்பது தெரிந்ததே.

இதனையடுத்து அவரது கார் நேற்றுக்காலை ஐந்து மணியளவில் இராசாவின் தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து 75 யார் தூரத்தில் அனாதரவாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

காரில் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று யாழ் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதிக்கு ஏராளமான நோயாளர்கள் வந்திருந்தனர். சிகிச்சைகள் வழமைபோல் நடைபெற்றன.

வேலை நிறுத்தம் தொடர்பாக யாழ் வைத்தியர் சங்கம் வெளியிட்ட அறிக்கை 4ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பண்டாரி வருவாரா?

கொழும்பு, மார்ச் 31

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த திரு. பண்டாரி ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் வரக்கூடும் என்று ரூபவாஹினி நேற்றிரவு அறிவித்தது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற்றை மேற்கோள் காட்டி ரூபவாஹினி இச்செய்தியை அறிவித்தது.

பண்டாரி இம்மாதம் இருபதாம் திகதி இலங்கை வருவார் என ஏஜன்சி செய்தி ஒன்று சனி நள்ளிரவு வெளியாகியது.

## பண்டாரியும் பதவிகளும்

புதுடில்லி, மார்ச் 30

ஓய்வு பெறும் திரு. ரொமேஷ் பண்டாரிக்கு புதிய பதவி எதுவும் இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை.

நிச்சயமாக முக்கிய பதவி ஒன்று அவருக்கு வழங்கப்படும் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறின.

ஏயர் இந்தியா விமான சேவையின் தலைவர், —

இந்தியாவின் ரஷ்யத் தூதர் —

ராஜ்ய சபா எம். பி— ஆகிய பதவிகளில் ஒன்று திரு. பண்டாரிக்கு வழங்கப்படலாம் என்று புதுடில்லி வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன

இனப் பிரச்சினை சம்பந்தமாக திட்டவட்டமான யோசனைகளை இலங்கை முன்வைத்தால் மட்டுமே திரு பண்டாரிக்கு விசேட தூதர் பதவி வழங்கப்படக்கூடும் என்றும் அவ் வட்டாரங்கள் கூறின.

## வவுனியாவில் கறுப்புச்சட்டையர் போல நடித்த கொள்ளையர்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வவுனியா நம்பைக் குளம் வீதியில் உள்ள வீடொன்றில் கறுப்பு உடையணிந்து வந்த கொள்ளைக் கூட்டம் ஒன்று மூன்று வீடுகளில் இருந்து தொலைக்காட்சிப் பெட்டி, டெக், சேலைகள், கடிகாரங்கள் உட்பட பல பெறுமதிமிக்க பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றிருக்கிறது.

கறுப்புச் சட்டை அணிந்த சீருடையினர் என இவர்கள் தம்மை இனங்காட்டிக்கொள்ள முயன்றபோதும் அவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கொள்ளைக் கோஷ்டியே என்பது தெரியவந்தது.

இதுபற்றி வவுனியா பிரஜைகள் குழு மூலம் வவுனியா பொலீஸாருக்குப் புகார் செய்யப்பட்டது பொலீஸார் உடன் நடவடிக்கையில் இறங்கினர்.

நெடுங்கேணிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் ஒரு பகுதியை பொலிஸார் மீட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## 20 பேர் கொலை

சண்டிகார், மார்ச் 30

பஞ்சாபில் இன்று (ஞாயிறு) இடம்பெற்ற வன்செயல்களில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

சீக்கிய தீவிரவாதிகளே இவர்களைச் சுட்டுக் கொலை செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் என்று கருதப்படும் மூன்று பேரையும் அவர்கள் பாவித்த ஆயுதங்களையும் ஜீப் வண்டி ஒன்றையும் ஆயுதப் படையினர் சுற்றிவளைத்துப் பிடித்தனர்.

(முன்வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கண்ணம்பாவின் பேத்தி

### ரேகாவின் கனவு நனவாகுமா?

சின்னச் சின்ன வேடங்களிலும், கவர்ச்சிவேடத்திலும், நடிக்க இடையிடையே வாய்ப்புகள் வந்த போதும் ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவிடுகிறாராம் ரேகா.

தமிழ், தெலுங்கு கன்னடம் ஆகிய மூன்று மொழிகளில் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருக்கும் ரேகா இந்திப் படம் ஒன்றில் நடிக்க வாய்ப்பு வந்தும் நடிக்க நேரம் இல்லாததால் ஒப்புக்கொள்ள முடியவில்லையாம்.

ரேகா சொல்கிறார்:-

"பத்தாம் வகுப்புப் படிப்பை முடித்து விட்டு வீட்டில் இருந்த போது "வேங்கையன்" படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதே 'மௌனியின் பொருத்தம்' படத்திலும் சந்தர்ப்பம் கிடைத்தது.

'வேங்கையன்' படம் தயாரிப்புப் பிரச்சினைகளால் தாமதப்படவே 'பொருத்தம்' படம் மூலம் அறிமுகமானேன்.

ஆனால் 'பொருத்தம்' படம் எதிர் பார்த்த வரவேற்புபெறாததால் திரையுலகில் மின்ன முடியாமல் போய்விட்டது.

ஒரு சிறிய இடைவெளிக்குப் பின் தெலுங்குப் படவுலகில் காலடி எடுத்து வைத்தேன்.

'சாகரமதனம்' படத்தில் ரஜனிஷ் என்ற புதுமுகத்துடன் இணைந்து நடித்தேன் இருவருமே புதுமுகங்கள். அதைத் தொடர்ந்து விட்டலாச்சாரியாவின் புதல்வர் பி. வி. ஸ்ரீவாசன் கன்னடத்தில் இயக்கிய 'சாமுண்டீஸ்வரி பூஜா மகிமெ' படத்திலும் நடித்தேன்.

இரண்டு வேடங்களிலும் சிறப்பாக நடித்ததால் நல்ல பெயர் கிடைத்தது அடுத்தடுத்து பல படங்களில் நடிக்க ஒப்பந்தமானேன்.

இப்பொழுது நல்ல பாத்திரங்களில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்துள்ளன சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திரையுலகில் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறேன்" என்றார்.

கண்ணம்பாவின் பேத்தியான ரேகா தொடர்ந்து இதைக் கடைப் பிடிப்பாரா?

தினசரி சினிமா

## தென் ஆபிரிக்க மாணவர் பகிஷ்கரிப்பு

டர்பன், மார்ச் 30

தென்ஆபிரிக்க நகரான டர்பனில் 100க்கு மேற்பட்ட கறுப்பினப் பிரதிநிதிகள் டர்பன் நகரில் கூடுகிறார்கள்.

பள்ளிக்கூட மாணவர்களின் பகிஷ்கரிப்பு இயக்கம் மேலும் தொடரப்பட வேண்டுமா என்ற விடயம் அங்கு ஆராயப்படுமெனக் கூறப்படுகிறது.

இந்த மாதம் 8 ஆம் திகதி வரை இந்தப் பகிஷ்கரிப்பு இயக்கம் ஏற்கனவே திட்டமிட்டு நடைபெற்று வந்தது.

கறுப்பின மக்களுக்கெதிரான வெள்ளையர் சிறுபான்மை ஆட்சியின் கல்விக் கொள்கைளுக்கு எதிராகவே இது நடைபெற்று வருகிறது

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முருகர் சபாபதி**

[இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்]

மலர்வு: 04-04-1928 உதிர்வு: 10-04-1985

திதி: 31 03 1986

கடமைதான் உன்னுடைய கருத்து என்றாய்!
காசினியில் அதையுர் தான் காட்டி நின்றாய்!
புடம்போட்ட பொன்னாக பூவில் வாழ்ந்து
புரமதுவாம் கூற்றுவனின் கரமும் சென்றாய்!
உடலன்று நெருப்பினால் நீறாய் வெந்து
உற்றவர்கள் இசைசனைந்தார் உளமும்
நொந்தார்
மடலுடைத்த தேனூறு மனமும் என்பார்!
மன்னவனே உனைப்பிரிந்து மயக்கமானோம்.
ஆண்டொன்று பிரிந்த பின்பும்
அழியவே இல்லைச் சோகம்!
மாண்டவுன் உடலும் ஐயா!
மதிசிரசோன் தாழில் செல்ல
வேண்டுகின்றோம் உனது மக்கள்
வேறுதுணை யாருமுண்டோ!
நீண்டிரு கரம் கூப்பி
நிமலன்தாழ் இறைஞ்சுகின்றோம்!

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்.

59, காட்டடைப்பு ரோட், காங்கேசன்துறை.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## ஈராக்கின் இரு யுத்தக்கப்பல்கள் தாக்கப்பட்டன

தெஹ்ரான், மார்ச் 30

ஈராக்கின் 2 யுத்தக் கப்பல்களைத் தாக்கியதாக ஈரான் உரிமை கோரியுள்ளது.

தாக்கப்பட்ட யுத்தக் கப்பல்களில் இருந்து துருப்புக்களைக் காப்பாற்ற முயன்ற இரண்டு ஹெலிக்கொப்டர்களும் ஈரானால் சுட்டுவீழ்த்தப் பட்டன.

இப்படி ஈரான் அறிவித்துள்ளது.

இதவிடையில் ஈரானால் 1983 இல் கைப்பற்றப்பட்ட 14 நிலைகளைத் தான் மீண்டும் கைப்பற்றி விட்டதாக ஈராக் அறிவித்தது.

ஈராக்கின் இக் கோரிக்கை குறித்து ஈரான் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

அணுஆயுத தடைபற்றி

# அமெரிக்காவுடன் பேச ரஷ்யா ஆயத்தம்

## தொலைக் காட்சியில் கோர்ப்பச்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, மார்ச் 30

அணு ஆயுதத் தடை தொடர்பான பேச்சுவார்த்தைகளை அமெரிக்காவுடன் தொடர ரஷ்யா தயாராக இருப்பதாக கொர்ப்பச்சேவ் தெரிவித்துள்ளார்

ரஷ்ய தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றும் பொழுதே மேற்கண்ட தமது விருப்பத்தை கொர்ப்பச்சேவ் வெளியிட்டார்

இந்தப் பேச்சுவார்த்தைகளை லண்டனிலோ அல்லது பிரான்ஸிலோ அன்றி அமெரிக்கா விரும்பும் வேறெந்த ஐரோப்பிய தலை நகரிலோ நடத்த தாம் ஆயத்தமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

அணுஆயுத பரிசோதனையை ரஷ்யா ஒரு தலைப்பட்சமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுப்பேசிய ரஷ்ய அதிபர் அமெரிக்கா அண்மையில் நெவாடாவில் நடத்திய அணு ஆயுத பரிசோதனையைக் கண்டித்தார்

அமெரிக்கா அணு ஆயுதத் தடை தொடர்பான பேச்சுகளில் இணக்கம் காண விரும்பாது போனால் சோவியத்தும் தனது அணுஆயுத சோதனைகளைத் தொடர்ந்து நடத்தும் எனவும் எச்சரித்துள்ளார்.

# பஞ்சாப் மாநிலத்தில் இந்துக்கள் படுகொலை!

## சீக்கியத் தீவிரவாதிகளைத் தேடி பொலீஸார் வலைவிரிப்பு

சண்டிகார், மார்ச் 30

பஞ்சாப் மாநிலத்தில் ஜலந்தர் பகுதியில் பொதுமக்கள் 8 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 1குழந்தைக்கு கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது.

ஜீப் வண்டியொன்றில் வந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றே இந்தக் கொலைகளை நடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

சீக்கியத் தீவிரவாதிகளே இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டு இருக்க வேண்டும் என மேலும் நம்பப்படுகிறது.

இந்த வன்முறைச் சம்பவங்களை அடுத்து பஞ்சாப்பில் பொலீஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பஞ்சாப் மாநிலத்துக்கான புதிய பொலீஸ் அதிபர் நியமனம் நடந்த கையோடு இந்தக் கொலைகள் நடந்தது பெரியதொரு சவாலாகவே கருதப்படுகிறது.

தீவிரவாதிகளின் மறைவிடங்களைப் பொலீஸார் தீவிரமாகத் தேடிவருகிறார்கள்.

இரவு பகல் 24 மணி நேரமும் பொலிஸ் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

பாரா – இராணுவப் பிரிவும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்துக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சீக்கியத் தீவிரவாத நடவடிக்கைகளை அகாலிதன் உட்பட பல சீக்கிய அமைப்புகள் கண்டித்துள்ளன.

பஞ்சாப்பில் ஏற்பட்டு உள்ள நிலைமைகளை நேரில் கண்டறிய மத்திய உள்துறை துணை அமைச்சர் அருண் நேருவும் காங்கிரஸ் துணைத்தலைவர் அர்ஜுன் சிங்கும் பிரதமர் ராஜீவ் காந்தியால் அங்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

"நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்கும் சவாலாக அமைந்து வரும் இந்த நடவடிக்கைகளை அரசு பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்" என பிரதமர் ராஜீவ் எச்சரித்துள்ளார்.

## பாகிஸ்தானின் அணு ஆயுதம் குறித்துரஷ்யா

மாஸ்கோ, மார்ச். 30

அணு ஆயுதங்களைப் பாகிஸ்தான் வைத்து இருப்பது, தென்கிழக்கு ஆசியாவின் ஸ்திர நிலைக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கும். இப்படி ரஷ்ய வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளி உலகில்

### விடுதலை

பரிசுத்த பாப்பரசர் ஜோன் போலைக் கொலை செய்ய முயன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைசெய்யப் பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

வழக்கை விசாரணை செய்து வந்த ரோம் நீதிமன்றமே இவர்களை நிரபராதிகளாகக் கண்டு விடுதலை செய்துள்ளது.

## பிரிட்டிஷ் அமைச்சர் பாரதம் வருகிறார்

### 18 உறுப்பினர் குழுவும் கூடிவருகிறது

புதுடில்லி, மார்ச 30

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஷிப்றே ஹோவ் இன்று பாரதம் வருகிறார்.

18 உறுப்பினர் குழுவுடன் இங்கு வரும் ஹோவ் பாரத வெளியுறவு அமைச்சர் பி. ஆர். பகத்தையும் மற்றும் ஜனாதிபதி பிரதமர் ஆகியோரையும் சந்திப்பார்.

பாரத-பிரிட்டிஷ்உறவு நிலை தொடர்பாக விரிவான பேச்சுக்கள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பிரிட்டனுக்கு எதிராக உள்ள முறைப்பாடுகள் தொடர்பாக பாரதம் வெளிப்படையாக எடுத்துச் சொல்லும்.

அத்துடன் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் குறிப்பாக சீக்கியர்களின் தீவிரவாத நடவடிக்கைகள் பிரிட்டனிலிருந்து முடுக்கி விடப்படுவது பற்றிய குற்றச்சாட்டு தொடர்பாகவும் பாரதம் வெளிப்படையாகப் பேசும் என நம்பப்படுகிறது

## மலேசியப் பிரஜை கம்பியால் அடித்துக் கொலை

கொழும்பு, மார்ச் 31

மலேசியப் பிரஜையான தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு மரணமானார்

மொனறாகலையில் இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இந்த மலேசியப் பிரஜை, மொனறாகலை பெல்வத்த சீனி ஆலையில் பணிபுரிந்து வந்தார்

சம்பவதினம் தொழிலாளர் சிலருடன் இவர் வாக்குவாதப்பட்டாராம்.

அதைத் தொடர்ந்து தொழிலாளர் சிலரை அங்கு இருந்த கொள்கலன் ஒன்றுக்குள்வைத்து இவர் பூட்டிவிட்டாராம்.

கொள்கலனைத் திறந்த பின்னர் வெளியே வந்த தொழிலாளர்கள், ஆத்திரத்தில் இரும்புக் கம்பியால் தொழில்நுட்ப அதிகாரியைத் தாக்கினர்

இப்படி பொலீஸ் விசாரணைகள் வெளியானது.

## பன்ன வேலை பயிற்சி வகுப்பு

பருத்தித்துறை, மார்ச் 31

தம்பசெட்டி, நாவலடி ஆகிய பகுதிகளில் அமைந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் பனம் பொருள் அபிவிருத்தி நிலையத்தின் ஆதரவில் பன்னவேலைப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இப்பயிற்சி வகுப்பை பனம் பொருள் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் திரு எஸ் லோகநாதன் அண்மையில் திறந்து வைத்தார்.

## உள்ளூர்தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு கட்டுப்பாடு

### தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஏற்பாடு

நல்லூர், மார்ச்.31

யாழ்ப்பாணத்தில் செயற்படும் உள்ளூர் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைகள் இனி மேல் மட்டுப் படுத்தப்பட்ட சேவைகளாகவே நடத்தப்படும்.

இதற்கான ஒழுங்குகளையும் முடிவுகளையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான கீழ் கண்ட முடிவுகள் நாளை முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் அமுல் படுத்தப்படும் என மக்கள் விடுதலைக் கழகம் அறிவித்துள்ளது

1. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 2 – 30 மணி தொடக்கம் ஞாயிறு மாலை 6 – 30 மணி வரை உள்ள காலங்களிலும் போயா தினத்திற்கு முன் தினம் 2 – 30 மணியிலிருந்து போயாதினம் மாலை 6–30 மணிவரையுள்ள காலங்களில் மட்டுமே சினிமாப் படம் ஒளிபரப்ப முடியும்.

2. ஆபாசப் படங்கள் காட்டுவதை நிறுத்தி மக்களிற்கும் மாணவர்களுக்கும் அறிவை வளர்க்கக் கூடிய படங்களை ஒளிபரப்ப வேண்டும்.

3. புதிதாக இனி ஒளிபரப்பு சேவை தொடங்குவதாயின் மக்கள் விடுதலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு (அமைப்புக்களினூடாக) அனுமதி பெற்றே தொடங்கவேண்டும். இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி நவீன சந்தைக்கு மேலும் இரு கட்டடங்கள்

சாவகச்சேரி, மார்ச்.31

சாவகச்சேரிச் சந்தையில் தற்போது கட்டப்பட்டுள்ள இருமாடிகளைக் கொண்ட நவீன கட்டடத்திற்கு மேலதிகமாக இருமாடிக் கட்டடம் ஒன்று விரைவில் அமைய இருக்கிறது.

சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் சந்தையின் மேற்குப் பக்கமாக புதிய கட்டடம் அமைக்கப்படும்.

அத்துடன் தற்போது நவீன சந்தையில் பெருங்குறையாக இருந்து வரும் மலசல கூடம் இல்லாத நிலையும் புதிய கட்டடத்தில் தவிர்க்கப் படும்.

## 3 காவலாளிகள் கடத்தப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 31

திருகோணமலைத் தொகுதியின் வடக்குப் பகுதியில் உள்ள யான் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தில் பணிபுரியும் மூன்று காவலாளிகள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இக்கடத்தல் இடம்பெற்றது.

கடத்தப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:

அலடின் குணவர்த்தன, எட்வின் குணவர்த்தன, பொடியப்புஹாமி

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

★ 5ஆயிரம் பேருக்கு வேலை இல்லை!

★ தினமும் ஒரு லட்சம் ரூபா இழப்பு!!

## பட்டினிச் சாவிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்

### மயிலிட்டி மீனவர் ஜனாதிபதிக்கு உருக்கமான வேண்டுதல்

காங்கேசன்துறை, மார்ச் 31

"மீன் பிடித்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி எம்மைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றுங்கள். அல்லது எங்கள் மக்களுக்கு வேறு தொழில்கள் வழங்கி எங்களை வாழவிடுங்கள்".

இவ்வாறு மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய கடற்றொழிலாளர் விரிவாக்க சேவைச் சங்கம் ஜனாதிபதியிடம் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு இ வேலும் மயிலும், செயலாளர் திரு. வீ செல்லக்கதிரமலை ஆகியோர் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மயிலிட்டிக் கிராமம் இலங்கையிலேயே முன்னணி வகிக்கும் மீன்பிடிக் கிராமமாகும். தலைமுறை தலைமுறையாக எமது மீனவர்கள் ஆழ்கடல் சென்று தொழில் செய்து வந்தார்கள். இவர்கள் தலைமன்னார் கரையிலிருந்து கொக்கிளாய் வரையும், பாம்பன் கடலிலிருந்து வேதாரணியம், நாகபட்டினம் வரையும் உள்ள கடற் பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடித்தலில் ஈடுபட்டதுடன் காலத்திற்குக் காலம் கச்சதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, பருத்தித்துறை, முல்லைத்தீவு அலம்பில், கொக்கிளாய் ஆகிய இடங்களில் வாடிகள் அமைத்துத் தங்கியும் தொழில் செய்தனர்.

ஆனால் எமது கிராமத்தில் வாழும் சுமார் 4 ஆயிரம் மீனவர்கள் இன்று தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். அவர்களுக்கு பல வழிகளிலும் உதவும் சுமார் ஆயிரம் தொழிலாளர்களும் வேலை இல்லாது இருக்கின்றனர்.

இக்கிராமத்தில் தொழில் செய்த 100 பெரிய மீன்பிடி வள்ளங்களும் 110சிறிய மீன்பிடி வள்ளங்களும் 10 இழுவைப் படகுகளும் 150 கட்டுமரங்களும் செயலற்றுக் கிடக்கின்றன. இப்பகுதி மீனவர்கள் தினசரி ஒரு லட்சம் ரூபா வருமானத்தை இழந்து உள்ளனர்.

ஆகவே மீன் பிடித்தலுக்கு உள்ள தடையை நீக்க வேண்டும். அல்லது வேறு வேலைகளை எமது மக்களுக்கு வழங்கி அவர்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும். — இப்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அதிபர்கள் கூட்டம்

வட்டுக்கோட்டை, மார்ச் 31

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 30 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பாடசாலை நிர்வாக விடயங்கள் பற்றி அறிவுரைகள் வழங்குவார்.

## கிளினிக்

பருத்தித்துறை, மார்ச் 31

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சித்திரை மாதம் தொடக்கம் கண், தோல் நோய்கள் தொடர்பாக கிளினிக்குகள் நடைபெறவுள்ளது. கடந்த சில வருடங்களாக இக்கிளினிக்குகள் நடைபெறவில்லை.

மாதந்தோறும் முதல் வரும் புதன்கிழமைகளில் தோல் நோய் சம்பந்தமான கிளினிக் நடைபெறும்.

மேலும் கண் நோய் சம்பந்தமான கிளினிக் மாதந்தோறும் முதலாம் மூன்றும் வாரங்களில் வரும் வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும்.

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

சர்வோதய இயக்கத்தினரின் பாலர் பாடசாலையும் யாழ்மாநகர சபை 'யுனிசெப்' நிறுவன உதவியுடன் கட்டப்பட்ட பொதுக்கிணறும் நாளை திறந்து வைக்கப்படவுள்ளன.

தேவரிக்குளப் பகுதியில் நிறுவப்பட்ட பொதுக் கிணறை மாநகரசபை ஆணையாளர் திரு. சி வி. கே. சிவஞானம் பொதுசன பாவிப்புக்கு நாளை பிற்பகல் திறந்து வைப்பார்.

பாலர் பாடசாலையை சர்வோதய வெளிக்கள அதிகாரி திறந்து வைப்பார்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சன சமூக நிலையத்தின் கோரிக்கைகளுக்கமைய இத்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

விலை மதிப்பற்ற சுதந்திரமானது மிகவும் இலகுவாகப் பெற்று விடக்கூடிய தொன்றல்ல என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அது போராடிப் பெற வேண்டியதாகும். அதனைப் பெற நாம் நீண்டதொரு போராட்டத்துக்குத் தயாராக வேண்டியவர்களாயுள்ளோம்.

-தந்தை செல்வா

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

31-03-86 உ. பெ 23

## தந்தையும் தனயரும்

"தமிழன் பிறப்புரிமையை - தனித்துவத்தை மாட்சிமையை - சுதந்திரக் கோரிக்கையை எடுத்து உரைக்கும் வகையில் தான் கடவுள் இன்று என்னை உங்களுடன் வாழ வைத்திருக்கிறார்."

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தந்தை செல்வநாயகம் 1975 ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் இப்படி எழுதியிருந்தார்.

ஆனால் அப்படிச் சொன்ன இரண்டு வருட காலத்திற்குள்ளேயே அவர் தமிழ் மக்களை விட்டுப் பிரிந்துவிட்டார்.

எனினும் அவர் காணத்துடித்த தமிழின விடுதலை இன்னமும் கிடைக்கவில்லை. ஆயினும் அவர் 1976 ஆம் ஆண்டில் கொழும்பு சட்டக் கல்லூரியில் பேசியவாறே இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

தமிழினத்தின் விடுதலை என் சீவிய காலத்தில் கைகூடாது போனால், வாலிபர்களாகிய நீங்கள் தொடர்ந்து போராடுவீர்கள். இந்த நம்பிக்கை எனக்குண்டு. அந்த உணர்வுடன் நான் கண்மூடுவேன்

இவ்வாறு அவர் அப்போது தெரிவித்தது எந்தளவு மெய் என்பதை நாம் எமது கண்ணாலே பார்க்கிறோம். தந்தையின் நம்பிக்கை வீண்போகவில்லை.

திரு சா. ஜே. வே செல்வநாயகம் வெறும் அரசியல் தலைவர் அல்லர். அவர் ஈழத் தமிழினத்தின் தேசியத் தலைவர். பின்னே வரக்கூடியதை முன்னே உணர்ந்து சொன்ன தீர்க்கதரிசி.

அவர் 1947 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 இல் இறக்கும் வரை தெரிவித்த கருத்துக்கள் எந்தளவு நிதர்சனமானவை என்பதை அவரது சிந்தனைச் சிதறல்களை வாசித்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழர் தந்தை செல்வநாயகத்தின் 89 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

அண்மைக் காலச் சரித்திரத்தில் இல்லாதவாறு ஈழத்தமிழ் மக்கள் இப்போது பெரும் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அவரைப் போன்ற ஒரு தலைவரை நினைவு கூர்வதால் மட்டும் பலன் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

அவரது சிந்தனை வடிவங்களை, கருத்துக் கருவூலங்களை நினைவு படுத்திப் பார்க்க வேண்டும். அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்க உழைக்க வேண்டும்.

நெருக்கடி மிகுந்த இந்தக் கால கட்டத்தில் தந்தை செல்வாவின் சில முக்கிய கருத்துக்களை வாசகர்கள் முன் வைக்கின்றோம்.

* விடுதலைக்காக நடத்தும் எங்கள் போராட்டம் தியாகத்தினால் தான் வெற்றி பெற முடியும். ஆகவே எங்கள் நோக்கத்தை நாம் அடையும்வரை எந்த விதமான கஷ்டங்களையும் எதிர் நோக்கத் தயாராக இருக்க வேண்டும்.
* விடுதலை இயக்கத்தில் எல்லோரும் பங்கு பற்ற வேண்டும். எவராவதுசரி, தனக்கு இதில் பங்கில்லை என்று தட்டிக்கழிக்க முடியாது. சுதந்திர இனமாக வாழ்வது எங்கள் எல்லோருக்கும் பொதுவான தார்மீகப் பொறுப்பு.
* ஒற்றுமையாக நாம் போராட்டத்தில் இறங்கித் திடசிந்தையோடு காரியம் ஆற்றுவோமானால் வெற்றி பெறுவது மிக எளிதாகும்,
* பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்று கூறிக் கொண்டு அற்ப சலுகைகளுக்காகத் தமிழனின் சுதந்திரக் கோரிக்கையையும், தன்மானத்தையும் விற்றுவிட நாம் தயாரில்லை,

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள், தலைவர்கள், போராளிகள் ஆகிய முத்தரப்பாரும் கருத்து ஊன்றிக் கவனித்துச் செயற்பட பொருத்தமான கருத்துக்கள் இவை என எண்ணுகிறோம்.

தந்தை செல்வநாயகம் அவர்களின் நேர்மை, அஞ்சாமை, கனவான் தன்மை என்பன அப்பழுக்கற்றவை. எதிரிகளும் ஏற்றிப் போற்றிய பண்பாளர் அவர்.

தமிழ் மக்களில் ஒரு சிலர் அவரை வேறு கண்ணோடு பார்த்தார்கள். எனினும் அவர் ஈழத் தமிழ் மக்களின் தன்னிகரில்லாத் தலைவராக இருந்து, தந்தையாக மாறினார். தனயன் தந்தைக்கு ஆற்றும் உதவியை தமிழ் மக்களாகிய நாம் அவருக்குச் செய்தாக வேண்டும்.

அத்தோடு—

தந்தையை வருங்கால சந்ததியும் அறிய வகை செய்வது அவசியம். அவரது வாழ்க்கையை, கருத்துக்களை நூல் வடிவில் கொண்டு வந்து பேணுவது முக்கியம்.

இல்லையேல் தமிழர் வரலாற்றின் சரித்திர நாயகனான எஸ். ஜே. வி. மறக்கப்பட்டு விடுவார்.

## முதன்மையான தலைவர் டானியல்

யாழ்ப்பாணம் மார்ச் 31

காலாதிகாலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் அல்லற்பட்டு வாழ்ந்து வந்த மக்களுக்கு உரிமை வெளிச்சம் ஏற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை அமைத்து வழிநடத்திய வர்களில் முதன்மையான தலைவர் கே. டானியல்.

பிரபல எழுத்தாளர் கே. டானியலின் மறைவு குறித்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் விடுக்கப்பட்ட அனுதாபச் செய்தியில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இயக்கத்தின் தலைவர் திரு.கே. கிருஷ்ணபிள்ளையினால் விடுக்கப்பட்ட அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# உரக்களஞ்சியம் மீண்டும் வறணியில்

## வடமாராட்சி விவசாயிகள் சிரமம் நீங்குகிறது

சாவெட்டி, மார்ச் 31

கடந்த ஒன்றரை வருடங்களாகப் பூட்டப்பட்டிருந்த வறணி உரக் களஞ்சியம் மீண்டும் ஏப்ரில் மாதம் தொடக்கம் இயங்கவுள்ளது.

வடமராட்சி விவசாயிகள் காங்கேசன்துறை கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளுக்குச் சென்று பெரும் சிரமத்தின் மத்தியில் உரத்தை பெற்று வந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு மீண்டும் வறணி உரக் களஞ்சியசாலையை திறப்பதென யாழ் சமநலச் சேவைப் பிரிவு தீர்மானித்துள்ளது.

இதனால் விவசாயிகள் கட்டுப்பாட்டு விலையில் உரத்தைப் பெறக்கூடியதாகவும் கமநல சேவை நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட தனிசார் நிறுவனங்கள் ஆகியவை வறணி உரக்களஞ்சியத்தில் இருந்து உரத்தைப் பெற்று விவசாயிகளுக்கு விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரியப்படுகிறது.

## இன்று சிரமதானம்

நல்லூர், மார்ச் 31

தந்தை செல்வா, கோப்பாய் முன்னாள் எம். பி. கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு இன்று காலை அரியாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய சுற்றுடலில் சிரமதானம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

அரியாலை மேற்கு சமாதான சபைத் தலைவரும், திருநெல்வேலி இந்து வித்தியாலய அதிபருமான திரு சி. வைகுந்தசாமி தலைமையில் இச் சிரமதானம் நடைபெறவுள்ளது.

## பருத்தித்துறை ஆஸ்பத்திரி இயங்க ஒத்துழைப்பு கோரப்படுகிறது

பருத்தித்துறை,மார்ச் 31

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்திய சாலை பாதுகாப்புக்குழுவும் பருத்தித்துறை ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமும் இணைந்து பொது மக்களுக்கும் இயக்கங்களுக்கும் ஓர் பொதுவான வேண்டுகோளை விடுத்துள்ளன.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'நெருக்கடியான இக் காலகட்டத்தில் அரச பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுவரும் மக்களுக்கு ஓர் உயிர்நாடியாக விளங்குவது வைத்தியசாலைகளாகும்.

உயிர்ப்பிச்சை கேட்டு தஞ்சம் புகும் இப்புனித நிலையங்களுள் பலர் முறைகேடான முறையில் அண்மைக் காலங்களில் செயல்பட்டு வந்து உள்ளமை கவலைக்கிடமானதாகும். இவற்றைப் பொதுமக்களும் இயக்கங்களும் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமானதாக கருதப்படுகின்றது.''

''தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றிய தமிழ் வைத்தியர்கள் கடந்த காலங்களில் இடம் பெற்ற வாகனக்கடத்தல்கள், கொள்ளைகள் என்பவற்றினால் விரக்தியடைந்த நிலையில் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு வசதிகளுடன் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

- வைத்தியசாலை வளவுக்குள் ஆயுதங்களுடன் நுழைதல் தவிர்க்கப்பட வேண்டும்.
- பார்வையாளர்கள் அனுமதி நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வைத்தியசாலை அதிகாரியின் அனுமதியின்றி நோயாளர்களைப் பார்வையிடச் செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும்
- வைத்தியர்களையும் தாதிமார்களையும், ஊழியர்களையும் பலவந்தமாக சிகிச்சை அளிக்கும்படி தூண்டக்கூடாது.
- வைத்தியசாலை நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாகக் காணப்படும் குறைகளை வைத்திய அதிகாரிக்குத் தெரியப்படுத்துதல் தவிர வேறு நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.
- இயக்கம் என்ற போர்வையில் பொது மக்களும் ஏனையவர்களும் வைத்தியசாலைக்குள் அதிகாரம் செலுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும்.

''இவற்றை நடைமுறைப்படுத்த பொது மக்களும் சகல விடுதலை அமைப்புக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வைத்திய சேவையை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்'' இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.



பொய்யாமொழி

குறள்:

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

பொருள்:

நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

## பண்டிதமணியின் பெயரில் சைவத்தமிழ் கலாசார நிலையம்

### ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 31

பண்டிதமணி அவர்களின் கட்டுரைகளையும் அவர்களைப் பற்றிய கட்டுரைகளையும் நூல் வடிவில் வெளியிடுவதும் ஞாபக விழாவை நடத்துவதும் வரவேற்கக் கூடியதே. அத்துடன் பண்டிதமணி அவர்களின் பெயர் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய வகையில் பல்கலைக்கழகத்தில் பீடம் ஒன்றையோ சைவதமிழ்க் கலாசார நிலையம் ஒன்றினையோ அமைப்பது அவசியம்.

''பண்டிதமணி அவர்களின் ஞாபக முயற்சிகள் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபற்றிய யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. த. கணநாதலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை தலைமையில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தின் நோக்கங்கள் பற்றி பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் விரிவாக எடுத்துரைத்தார்.

முன்னை நாள் கல்வி அதிபதி திரு தி மாணிக்கவாசகர் பேசுகையில் ''இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நீதியை உபாசித்தவர் அவரால் நாம் சிறப்புப் பெற்றோம். அவரது நினைவாக எப்பொழுதும் எல்லோருக்கும் பயன்படக் கூடிய வகையில் அவரது கட்டுரைகளை நூல்வடிவில் வெளியிடுவதுடன் அன்னார் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் அறிஞர்களிடம் இருந்து சேகரித்து வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும்'' என்றார்.

பண்டிதமணியின் நூலையும், பண்டிதமணி பற்றிய ஆராய்ச்சி நூலையும் வெளியிடுவதுடன் பண்டிதமணி அவர்களது நினைவுப் பேருரையை வருடா வருடம் நடத்த வேண்டியன செய்யப்படல் வேண்டுமென்றார் திரு சு. இராநாயகம் அவர்கள்.

ஆசிரியமணி ஆர். டி. சுப்பிரமணியம், திருவாளர்கள் க. தி. சம்பந்தன் த. இராசேந்திரம், சைவ பரிபாலன சபைத் தலைவர் நம. சிவப்பிரகாசம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

## உரிமைகளை மீட்க போராட்டம் அவசியம்

### தீவட்டிப் பேரணியில் உரை

நல்லூர், மார்ச் 31

உரிமைகளை மீட்டெடுக்கும் போராட்டத்தில் ஆயுதப் போராளிகள் மட்டும் போராடி உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

உரிமைகளை இழந்துள்ள அனைத்து மக்களும் திரண்டு போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அண்ணா தி. மு. கவும் அதன் தலைமையிலான 15 கூட்டமைப்புகளும் இணைந்து நடத்திய தீவட்டிப் பேரணியை முடித்து வைத்துப் பேசும் போது அ. தி. மு. க பொதுச் செயலாளர் திரு. பொன். மதிமுகராசா கூறினார்.

அவர் தொடர்ந்தும் பேசும் போது கூறியதாவது:

எல்லா மக்களையும் போராட்டத்தினுள் இழுக்கின்ற நிலைமையை தீவட்டிப் போராட்டம் போன்ற வெகுஜனப் போராட்டங்களினூடாகத் தான் உருவாக்க முடியும்.

'தீ' மாபெரும் சக்தி அதனை எவரும் அழித்து விடமுடியாது. மக்கள் உள்ளத்தில் தீ பற்றிக் கொண்டால் அதனை எந்தச் சக்தியாலும் தணித்து விட முடியாது.

இப்படி அவர் சொன்னார்.

கருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவரும் யாழ் மாநகரசபையின் முன்னாள் உதவி நகர மேயருமான திரு. ஆ. துரைராசசிங்கம் அங்கு உரை நிகழ்த்துகையில்;

யாழ்ப்பாணத்தில் குண்டு போட்டு மக்களை அழித்த விமானம் தென் இலங்கையில் தாறுமாறாக வீழ்ந்து நொருங்கியது.

மக்கள் முன்னால் வீரம் பேசுகிறவர்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்க மாட்டார்கள் என்றார்.

யாழ்ப்பாணம் முன்னாள் மேயர் திரு. இராசா விஸ்வநாதன், திரு. செல்வவடிவேல், சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் டாக்டர் ப. [illegible] ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

# வட்டி வருமானத்துக்கு வரி செலுத்த வேண்டியவர் யார்?

**இது ஒரு விளக்கக் கட்டுரை**

நாளை ஏப்ரல் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் நிலையான வைப்பில் இருந்து கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு வரி அறவிடப்பட உள்ளது.

1985 ஆம் ஆண்டு உள்நாட்டு வருமானச் சட்டத் திருத்தத்தின் கீழ் (இல 56 113-a-(1), இந்த நடைமுறை அமுலாக இருக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் வருமானவரி செலுத்த வேண்டியவரிடம் இருந்தே இத்தகைய கழிவுகளைப் பெறலாம்.

எனவே வருமான வரியிறுப்பாளர்கள் அல்லாதவர்களிடமிருந்து நிதி நிறுவனங்கள் இத்தகைய வரிகழிப்பினைப் பெற வேண்டிய அவசியமில்லை.

வரியிறுக்க வேண்டிய கடப்பாடு இல்லாதவர்கள் தமது நிலையான வைப்புப் பணமுள்ள நிதிநிறுவனங்களுக்கு விபரங்களை அனுப்பித் தாம் வரியிறுக்க வேண்டியவர்கள் அல்லர் என்னும் உறுதியுரை கொடுத்து வரிக்கழிப்பு செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

சட்ட வரம்புக்கு உட்பட்டு இத்தகைய அறிவுறுத்தல்களை நிதிநிறுவனங்கள் அமுலாக்கும்.

வங்கிகள், நிதிநிறுவனங்கள் தவிர்ந்த கம்பனிகள் தமது இயக்குநர்கள் அல்லது வேறு நபர்களிடமிருந்து சில வேளைகளில் நிதிபற்றாமை காரணமாக அன்றாட வியாபார அலுவல்களுக்காகக் கடனாகப் பெறும் தொகை இச்சட்டத்துக்கு உட்படாது.

அத்தகைய கம்பனிகளின் கொடுக்கல் வாங்கல் இச்சட்ட வியாக்கியானத்துக்கு அமையாத காரணத்தால் இங்கும் வரிகழிப்பு தேவைப்படாது.

தமது அங்கத்தவர்களின் கணக்குகளில் வட்டியைச் செலுத்தும் சேமலாப நிதியங்களும் வரிகழிப்பு செய்யவேண்டியதில்லை

1985 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தின் கீழ் வரியிறுக்க வேண்டியவர்கள் யாவரென்று பார்ப்போம். அவ்வாறு செய்வதன்மூலம் யார் [illegible] அறிவுறுத்தல்களை வழங்க வேண்டியவர்கள் என்பதைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.

(1) 1-4-86 தொடக்கம் வருடம் 27 ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலான வருமானம் பெறுவோர் வரியிறுப்பாளர்களாகக் கணிக்கப்படுவர்

எனவே இத்தொகைக்குக் குறைவாக வட்டி வருமானம் பெறுவோர் வேறு வருமானம் எதுவும் இல்லாதிருப்பின் தத்தம் நிதிநிறுவனங்களுக்கு வரி கழிப்புச் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கலாம்

(2) வருட வருமானம் 27 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாக உள்ளவர்களின் நிலையான வைப்புப் பணத்திலிருந்து பெறும் வருடாந்த வட்டி வருமானம் 27 ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலாக இருப்பினும் அவர்கள் அப்பணத்தின் ஒரு பகுதியை 18 வயதுக்குக் கூடிய தமது சொந்தக் குழந்தைகளுக்கு அல்லது மனைவிக்கு வழங்கினால், அவர்களும் வரிசெலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

தமது பிள்ளைகள், மனைவி ஆகியோரின் வருட வருமானம் 27 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவாக இருப்பின் நிலையான வைப்புப் பணம் உள்ளவர்கள் அதனை அவர்கள் பெயரில் பிரித்து வைப்புச் செய்வது பயனுள்ள நடவடிக்கை ஆகும். 1985 ஆம் ஆண்டு நவம்பர் 13 ம் திகதிக்குப் பின்னர் இத்தகைய அன்பளிப்பைச் செய்யின் அதற்கு வரிகட்ட வேண்டியதில்லை.

ஒருவரின் வருமானத்தைக் கணிக்கும்போது சில வரிவிலக்குகள் இருக்கின்றன

அவையாவன:

(அ) வங்கிக் கடன் அல்லது மேலதிகக் கடன் (Over-Draft) ஆகியவற்றுக்குச் செலுத்தும் வட்டி

(ஆ) வியாபாரம் அல்லது விவசாயத்தில் ஏற்படும் நட்டம்.

வருமான வரிக்குட்பட்ட தனது ஆகக்கூடிய வருட வருமானமான 150,000 ரூபாவில் மூன்றில் ஒரு பங்கு வரை பின்வரும் காரணங்களுக்காக வரிவிலக்குக் கோரலாம்:-

(i) முதலாவது வீடு வாங்க அல்லது வீட்டுக் காணி வாங்க அல்லது வீடு கட்ட

(ii) அரசாங்கம் அனுமதி வழங்கிய தரும ஸ்தாபனங்கள் அல்லது ரேபியா செலவினங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகள்

(iii) பொதுக் கம்பனிகளில் செய்யப்படும் முதலீடுகள்

(iv) வைத்திய, உயிர் கலவரம் சம்பந்தமான காப்புறுதித் தவணைக் கட்டணம் செலுத்தல்

(v) சேமலாப நிதிக் கொடுப்பனவுகள்

(vi) தொழிற்துறை சங்கங்களுக்குச் செலுத்தும் பணம், புத்தகம் வாங்கச் செலவிடும் பணம் ஆகியன.

(vii) முப்பது வயதுக்கு உட்பட்ட திருமணமான அல்லது திருமணமாகாத ஒரு பிள்ளை பிறநாட்டில் பட்டதாரி அல்லது பட்டதாரி மேற்படிப்பைப் பெறுவதற்கான செலவினம் - பட்டதாரிப் படிப்பாயின் உயர் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

- இவை காரணமாக ஒருவர் வருமான வரிக் கணிப்பில் வரிவிலக்குத் தருமாறு கோரலாம்.

நிலையான வைப்புக் கணக்கின் பதிவில் வரியிறுக்க வேண்டிய வருடாந்த வருமானம் இல்லாதவர்களாயின் வரிகழிப்பு செய்ய வேண்டாம் என்று அறிவித்தல் வழங்கும் அதே வேளையில் தாம் வரியிறுப்பாளர்கள் அல்லர் என்ற உறுதியுரையையும் தமது நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

வரிசெலுத்த வேண்டிய வருமானம் உள்ளவர்கள் கீழ் வரும் அட்டவணையில் உள்ளவாறு தமது வைப்புப் பணத்தில் வரி செலுத்த வேண்டிவரும்:-

வரி அட்டவணை 86/87

| | வரி- | | மொத்தம் |
|---|---|---|---|
| 21000/- | 10 வீதம் | 2100/- | 2,100/- |
| 24000/- | 20 வீதம் | 4800/- | 6 900/- |
| 24000/- | 30 வீதம் | 7200/- | 14,100/- |
| 24000/- | 50 வீதம் | 9600/- | 23,700/- |
| மீதி | 50 வீதம் | | |

வரியிறுக்க வேண்டிய வருட வருமானம் 21 ஆயிரம் ரூபாவாக இருப்பின் பத்து வீத வரி விதிக்கப்படும். வட்டியிலிருந்து ஒருவர் பெறும் மாதவருமானம் நாலாயிரம் ரூபாவாக இருப்பின் பத்துவீத வரியும், ஆறாயிரம் ரூபாவாயின் இருபது வீதமும் ஆகும்.

இப்படியான சூழ்நிலையில் வரி கழிப்புப் பிரிவு ஆணையாளருக்கு அவரிடமிருந்து கிடைக்கும் படிவத்தில் விண்ணப்பித்து அறிவுறுத்தல்கள் பெறல் வேண்டும்.

1979 ஆண்டு உள்ளூர் வருமான சட்டம் இல 28 சரத்து 10 இன் கீழும் 1985 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க சட்டத் திருத்தத்தின் கீழும் பின்வரும் வட்டி வருமானம் வரிவிலக்குப் பெற்றுள்ளன இவற்றைப் பொறுத்த வரையில் வரி கழிப்பு வசூலிக்க முடியாது:-

(அ) மத்திய வங்கியின் அனுமதியுடன் வர்த்தக வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட விசேட கணக்கிலிருந்து பெறப்படும் வட்டி

(ஆ) இலங்கையில் வசிக்காத அந்நிய நாணய கணக்கிலிருந்து கொடுக்கப்படும் வட்டி. (NRFC) கணக்கு வைத்திருப்பவர் பிறநாட்டில் வாழும் போதும், இலங்கைக்கு திரும்பிய பின் பத்தாண்டுகள் வரை இது அமுலில் இருக்கும்

(இ) வெளிநாட்டு வங்கி நிறுவனத்தில், வெளிநாட்டு நாணயத்தில் உள்ள சேமிப்பு கணக்கில் இருந்து பெறப்படும் வட்டி.

(ஈ) மீளளிப்புப் பணம் வரிகழிப்பு தொடர்பாக பணம் மீளளிக்கப்படுவதானால், பொலிஸ் வரிகழிப்பு மீளளிப்பு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். கணிக்கப்படும் ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய படிவங்களைத் திணைக்களத்துக்கு அனுப்பவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
*
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# உதயன்

31. 03. 1986 திங்கட்கிழமை

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்,
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகு விழா
போன்ற மங்கல வைபவங்களைத்
தத்ரூபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள
*
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

## வித்தாரம்

என்ன வலு அவசரமாய் வாருய் முரளி! என்ன சங்கதி? றோட்டிலை ஏதாவது விபத்து நடந்தோ அல்லது ஆமிக்காரர் வெளியாலை வந்திட்டினமோ. அப்பிடி ஒண்டும் இல்லையோ! அப்பாடா பெரிய நிம்மதியாய் போச்சு.

சரி, உதென்ன கையிலை இரண்டு மூண்டு நோட்டீஸ்களை வைச்சிருக்கிறாய்? எல்லாம் ஒரே நோட்டீஸ்தானோ அல்லது வெவ்வேறு விஷயங்களோ?

விஷயத்தை விடு நோட்டீசை அச்சிட்டவை, வெளியிட்டவை யின்ரை பேர் போட்டிருக்கோ பார். நீ பாக்கத் தேவையில்லை. நிச்சயமாய் அந்த விவரங்கள் நோட்டீஸ்களிலை இருக்காது.

இப்ப இஞ்சை எங்கடை யாழ்ப்பாணத்திலை அது ஒரு 'பாஷன்' ஆகிவிட்டுது. சரி போராளித் தம்பிமார் தான் அதுகளைப் போட்டா பெரிய கஷ்டங்கள் ஏற்படும் எண்டு அதுகளைத் தவிர்க்கினம் எண்டு சொல்லுவோம்.

ஒரு பக்கத்தாலை பாத்தா அதை ஒத்துக் கொள்ள இடமுண்டு.

அதுக்காக கோயில் நிர்வாகத்திலை இரண்டு பகுதி வந்த உடனையும், உடனை "பொதுமக்கள்" எண்டு ஒரு சொல்லைப் போட்டு இரண்டு பக்கத்தாரும் நோட்டீஸ் அடிச்சு விடுகினம். நாலு அஞ்சு பேர் சேர்ந்து நினைச்ச உடனை ஒரு நோட்டீஸ். வரிசையா இருக்கிற பொதுமக்களின் எல்லாற்றை கருத்தும் அது தான் எண்ட மாதிரி மற்றவை நினைக்கட்டும் எண்டு அந்த நோட்டீஸ்களை அடிக்கிறவை யோசிக்கினம். மக்களை அந்தளவு மடையராக் கினம்!

சங்கம், கோவில், அலுவலகம், நிர்வாகம் எண்டு எல்லா இடங்களிலையும் உந்த அநாமதேய வியாதி தொத்திப் போச்சுது அது மட்டுமே. கண்ட நிண்ட மாதிரி அவதூறு, சட்டவிரோதமான தெல்லாத்தையும் அச்சிலை போட்டிட்டு அதை பேப்பரிலை போட வேண்டும் எண்டும் எதிர்பாக்கினம்.

இந்த மொட்டைக் கடிதம் எழுதுறவையளைக் கண்டு பிடிச்சு நல்லாக் குடுக்கிறது எனக்கு ஞாபகம் இருக்கு. இப்ப அநாமதேய நோட்டீஸ் போட்டி ஒரு விளையாட்டு அலுவலாய்ப் போச்சுது

இந்த நோட்டீஸ்களைப் பாத்த உடனை எனக்குப் பெரிய வேதனை என்ன தெரியுமே, தமிழனுக்கு இந்தச் சின்னச் சின்ன விஷயங்களிலை கூட தங்களை யார் எண்டு இனங்காட்ட நெஞ்சுத் துணிவு இல்லையே எண்டுதான் அடுத்தது இன்னொண்டு. எந்த விஷயத்தை எழுதினாலும் பொதுமக்களின்ரை தலையிலை போட்டிடுகினம். அந்தளவுக்கு பொதுசனம் எடுப்பார் கைப்பிள்ளையாய் போச்சுதுகள். எல்லாப் பக்கத்தாலையும் அதுகளுக்குத் தான் இடியும், கூடாத பேரும்! ஸ்ரீமான் பொதுசனம் என்ன பாவம் செய்தாரோ இத்தனையையும் அனுபவிக்க.

குடும்பப் பிரச்சினைகளுக்கு கூட நோட்டீஸ் அடிச்சு விடுகினம். காதலில் தோல்வி, கல்யாணக் குழப்பம் எல்லாத்துக்கும் அநாமதேய நோட்டீஸ் தான்! இப்ப சுமை தாங்கி!

— கொண்டோடி

அடகுவைத்தோர் நடவடிக்கை

# இலங்கை வங்கி முன்பாகவும் மறியல்

## அடுத்த வாரம் முதல் நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அடகு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம் வெற்றியடையாவிட்டால் அடுத்தவாரம் இலங்கை வங்கி, அரச அலுவலகம் ஆகியவற்றின் முன்னால் மறியல் போராட்டம் விஸ்தரிக்கப்படும்.

அடகு வைத்தோர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் வங்கி நிர்வாகம் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்றை எடுக்கும்வரை மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

இந்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட ஏனைய வாடிக்கையாளர்கள் தங்கள் பிரச்சினையை அரசாங்க அதிபரிடம் முறையிடுமாறு சங்கம் கேட்டுக் கொள்கிறது

கடந்த வியாழக்கிழமை அரசாங்க அதிபர் மூலமாக வங்கித் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு இவ் விடயம் சம்பந்தமாக எமது நிலைப்பாட்டையும் இதனால் ஏனைய வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்தினோம்.

அரச அதிபர் பிராந்திய பொது முகாமையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது விரைவில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுவதாகப் பிராந்திய பொதுமுகாமையாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு பிராந்தியமுகாமையாளர் கொழும்பு சென்றுள்ளார். அவர் இந்த வாரம் ஓர் உறுதியான முடிவுடன் வரக் கூடும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

எனவே சகல வாடிக்கையாளரும் இந்த இறுதிப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள வசதியாக வங்கித்தினங்களில் தத்தமது நகைகள் அடைவு வைக்கப்பட்ட வங்கிகளின் முன்னால் காலை 7.30 மணிக்கு கூடுமாறு கேட்டுக் கொள்கிறோம். — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## யாழ். வைத்தியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

எமது நடவடிக்கையினால் இனிமேலாவது மக்களின் அத்தியாவசிய சேவைகளுக்கு பாதிப்பும் சமூக விரோதச் செயல்களும் தவிர்க்கப்படும் என்பதேஎமது எதிர்பார்ப்பு.

திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்த யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்களின் சார்பில் யாழ்வைத்தியர் சங்கம் விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொடர்ந்து நடைபெற்ற வன்செயல்களினால் யாழ் வைத்தியசாலையில் வைத்திய சேவைகள் மற்றும் வைத்திய போதனைகள் மிகவும் பாதிப்படைந்துள்ளன.

இதனால் பல்வேறு விதத்தில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள — குறிப்பாக இலவசசேவையில் நம்பியிருக்கும் வசதி குறைந்த — மக்கள் மேலும் இன்னல்படுவதை அண்மையில் சுட்டிக்காட்டி இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் அவசியத்தை விளக்கியிருந்தோம்.

இத்தகைய வன்செயல்களில் ஈடுபடுவோர் இதனால் அத்தியாவசியசேவைகள் பாதிக்கப்படும் என்பதையும், இவை சமூக விரோதச் செயல்கள் என்பதையும் உணர்ந்துள்ளனர். இதையிட்டு ஆறுதல் அடைகிறோம்.

கடந்த இரண்டு நாட்களும் எமது வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்ட சிரமங்களைப் பொறுமையுடன் சகித்துக்கொண்ட எமது மக்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அண்மையில் கடத்தப்பட்ட டாக்டர் ஒருவரின் கார் நேற்று அதிகாலை அதன் வெளிப்பாகம் மிகவும் உருக்குலைந்த நிலையிலும் சில பாகங்கள் அகற்றப்பட்ட நிலையிலும் அவரது இல்லத்திற்கு அருகாமையில் அனாதரவாகக் கிடக்கக் காணப்பட்டது

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## முஸ்லிம்களுக்கு தனிக் கட்சியா?

### கூடாது என்கிறார் ஹமீத்

கொழும்பு, மார்ச் 31

முஸ்லிம்கள் தனிக் கட்சி அமைக்கக்கூடாது இப்படி வெளிவிவகார அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத சொன்னார்.

அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணிக் கூட்டம் நேற்று கொழும்பில் நடந்தது.

இதுவரை காலமும் தேசியக் கட்சிகளுடன் இணைந்து முஸ்லிம்கள் பெருமளவு சலுகைகளைப் பெற்றுள்ளனர்; பெற்றும் வருகின்றனர்.

இந்த நிலையில் முஸ்லிம்கள் தங்கள் நலன்களைக் காப்பாற்ற தனிக் கட்சி அமைக்கவேண்டிய அவசியமில்லை.

இப்படி ஜனாப் ஹமீத் சொன்னார்

## சங்கானையில் கொள்ளை!

நல்லூர், மார்ச் 31

சங்கானையில் உள்ள பிரபல வர்த்தகரும் அடைவு நகை வியாபாரியுமான ஒருவரின் வீட்டிலும் கடையிலும் பெருந்தொகையான நகைகளும் பணமும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11.45 மணியளவில் இரண்டு வாகனங்களில் வந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகின்றது

## கதிரைகள் கையளிப்பு

நல்லூர், மார்ச் 31

யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலய அபிவிருத்திச் சபையினர் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகளை இன்று திங்கட்கிழமை கல்லூரிக்கு அன்பளிப்பு செய்கின்றனர்.

இது சம்பந்தமான வைபவம் ஒன்று இன்று கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம், வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கத்திடம் வைபவரீதியாக இன்று இக் கதிரைகளைக் கையளிப்பார்.

## தொழிற் சங்க தடைக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் சேவைச் சங்கத்தை அரசு தடை செய்துள்ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இப்படி அநீதி ஒழிப்பு ஒன்றியம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் காரணம் காட்டி நீடிக்கப்பட்டுள்ள அவசர காலச் சட்டத்தின் கீழேயே பிரஸ்தாப தொழிற் சங்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

தாதிமார்களின் போராட்டம், மிரட்டல்களுக்கு அஞ்சாமல் தொடரவேண்டும். தொழிலாளர்களும் ஊழியர்களதும் ஏனைய உழைக்கும் மக்களதும் போராட்டமாக அது அமையவேண்டும் இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

## தீ விபத்து தவிர்க்கப்பட்டது

பலாலி, மார்ச் 31

அச்சுவேலி - வலிகாமம் கிழக்கு வடபகுதி கூட்டுறவுச் சங்க களஞ்சிய அறையில் மின் ஒழுக்கால் ஏற்படவிருந்த தீ விபத்து தக்க நேரத்தில் காவலாளி மேற்கொண்ட சாதுரிய நடவடிக்கைகளினால் தவிர்க்கப்பட்டது.

இதனால் 13 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் காப்பாற்றப்பட்டன.

கடந்த செவ்வாய் இரவு 12 மணியளவில் காவலில் நின்ற காவலாளி மின்வயர்கள் எரிந்ததால் ஏற்படக்கூடிய மணத்தையும், மின்குமிழின் பிரகாசம் குறைவதையும் உணர்ந்தார்

அதனைத் தொடர்ந்து உடன் பிரதான மின் ஆளியினால் மின்சாரம் நிறுத்தப்பட்டது

பின்னர் இதுபற்றி காவலாளி களஞ்சியக் காப்பாளருக்கு உடன் அறிவித்தார். களஞ்சிய அறை திறக்கப்பட்ட போது சீனி மூடையில் தீ பிடிக்க ஆரம்பித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு தீ உடன் அணைக்கப்பட்டது

பல லட்சம் ரூபா பெறுமதியான அழிவுகளில் இருந்து சங்கத்தைக் காப்பாற்றிய ஊழியரை சங்கத் தலைவர் திரு. கமலநாதன் அவர்கள் பாராட்டியதுடன், வெகுமதியும் அளித்துக் கௌரவித்தார்.

## புதிய மைதானம்

மானிப்பாய், மார்ச் 31

சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு தற்காலிக விளையாட்டு மைதானம் ஒன்றை அவ்வூர் மக்கள் வழங்கியுள்ளனர்.

இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்த சங்குவேலி வைத்திலிங்கம் குடும்பத்தைச் சேர்ந்த பெரியார்களே தமது காணியை பாடசாலை விளையாட்டு மைதானமாக பாவிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

அண்மையில் புதிதாக இப்பாடசாலைக்கு நியமனம் பெற்ற அதிபர் திரு எஸ். சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியுடன் அவ்வூர் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து மைதானத்தை சிரமதான அடிப்படையில் சீர் செய்துள்ளனர்.

வவுனியா...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அந்த வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை. சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டன

கல்லுடைக்கும் இயந்திரத்தினால்

## சுற்றுடல் மாசுபடுவதை தடுக்க கோரிக்கை

நல்லூர், மார்ச் 31

கோப்பாய்ப் பகுதியில் சுற்றுடல் மாசடைவதை தடுக்கு முகமாக இப் பகுதியில் புதிதாக உருவாக்கப்படும் கல்லுடைக்கும் இயந்திரத்தின் தொழிற்பாட்டை உடன் நிறுத்துமாறு அங்குள்ள பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

இது சம்பந்தமாக மகஜர் ஒன்றினை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர், சுகாதாரப் பரிசோதகர், சமாதான சபைச் செயலாளர் அதிகார மளிக்கப்பட்ட அலுவலகர் ஆகியோருக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்

இங்கு ஏற்கனவே உருவாகியிருக்கும் தொழிற்சாலைகளினால் பல விவசாயப் பயிர்கள் நாசமாகியுள்ளன

சிறுவர் சிறுமியர் சுவாசக் கோளாறுக்குள்ளாகியுள்ளனர். வயதானவர்கள் பல பக்கவிளைவுகளினால் தொல்லைப்படவேண்டியுள்ளது.

—இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

## கண் நோய்

அம்பாறை, மார்ச் 31

அம்பாறை மாவட்டத்தில் தற்பொழுது கண் நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது

அண்மையில் இந்த மாவட்டத்தில் பெய்து வந்த பெருமழையின் பின்னர் நிலவும் வரட்சியைத் தொடர்ந்தே கண் நோய் பரவத் தொடங்கியுள்ளது

இங்குள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் கண்நோய் பரவியுள்ளதால் சில உயர் வித்தியாலயங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

## நெல்லண்டையில் புதிய ஆலை

பருத்தித்துறை, மார்ச் 31

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதி மீனவர்களின் நன்மை கருதி நெல்லண்டையில் உப்பு அரைக்கும் ஆலை ஒன்றை அமைத்துள்ளது.

இந்த ஆலையை மக்கள் வங்கி வடபிராந்திய உதவி முகாமையாளர் திரு. இ. செவிடிம்பரம் அண்மையில் திறந்து வைத்தார்.



# விளையாட்டரங்கு

## விறுவிறுப்பாக நடைபெறும் கரப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டப் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற முதல் போட்டியில் லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழக அணியை திருநெல்வேலி ஏ. எச். எஸ். விளையாட்டுக் கழக 'பி' அணி வென்றது

மற்றொரு போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை திருநெல்வேலி ஏ. எம். எச். எஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி தோற்கடித்தது

அன்றைய போட்டிகளுக்கு செல்வா வீடியோ உரிமையாளர் திரு அப்புத்துரை செல்வரெட்ணம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நொக்கவுட் போட்டியின் பிறிதொரு ஆட்டமொன்றில் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக 'பி' அணியை ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக 'பி' அணி தோற்கடித்தது.

இதேவேளை நாயன்மார்கட்டு விளையாட்டுக் கழக அணியை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய 'ஏ' அணி வென்றது.

இந்த போட்டிகளுக்கு நடுவர்களாக கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம், ஜனகன் நடராசா ஆகியோர் கடமையாற்றினர்.

### வெற்றி தோல்வி இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ் பல்கலைக்கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது

பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

பல்கலைக்கழக அணியின் சார்பில் ஸ்ரெனிஸ்லெஸ் ஒரு கோலையும், ஐக்கிய அணியின் சார்பில் பார்த்திபன் ஒரு கோலையும் போட்டனர்

### இலங்கை தோல்வி

கொழும்பு, மார்ச் 31

நேற்று நடைபெற்ற ஆசிய கிண்ணத்திற்கான முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் இலங்கை படுதோல்வியடைந்தது

ஒதுக்கப்பட்ட ஓவர்களில் பாகிஸ்தான் அணி 197 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை 116 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

## தடைப்படும் தொலைபேசி

பலாலி, மார்ச் 31

அச்சுவேலி தபால் நிலையத்தில் இயங்கும் யாழ்ப்பாண நேரடித் தொலைபேசி வசதி அடிக்கடி தடைப்படுகின்றது.

அச்சுவேலி தபால் நிலைய அதிபரதும், பொது தாபனங்களதும் மிகப் பெரும் முயற்சியால் யாழ்-அச்சுவேலி நேரடித் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டது.

மிகவும் நுட்பமான முறையில் இடையில் களவாக இணைப்பினை ஏற்படுத்தி தமது தேவைக்காக இத்தொடர்பை பாவிப்பதனாலேயே அடிக்கடி இவ்வாறு தடை ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது

## சைக்கிள்கள் கொள்ளை!

நல்லூர், மார்ச் 31

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் 19 புதிய சைக்கிள்கள் இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பகல் பத்து மணியளவில் ஆயுதபாணிகளாக வாகனமொன்றில் வந்த இவர்கள் அங்குள்ளவர்களை மிரட்டிவிட்டு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள்களை திருடிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அபிவிருத்திச்சங்க கூட்டம்

நல்லூர், மார்ச் 31

யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் ஏப்ரல் 3 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிற்பகல் 2.15 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்திற்கு கல்லூரி அதிபர் திரு. சு. பொன்னம்பலம் தலைமை வகிப்பார். கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு.பொ. ச. குமாரசுவாமியுடன் கலந்துரையாடல் நடைபெறும்.

## விறகு தட்டுப்பாடு

பலாலி, மார்ச் 31

இலங்கை மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டு வந்த விறகு விநியோகம் கடந்த ஒரு மாத காலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது

இதனால் வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் விறகுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
10 - 04 - 1951

மறைவு:
10 - 04 - 1985

திதி:
31 - 03 - 1986

**பாக்கியநாதன் இலங்கநாதன்**
(றேடியோ இயக்குநர், பொலிஸ் திணைக்களம்.)

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காகத் திகழ்ந்து காலமெல்லாம் எங்களைக் கண்ணின் இமைபோலக் காத்தருளிய அன்பின் திருவுருவே! ஓராண்டு நிறைவுபெறும் இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகப்பன், மனைவி, மக்கள், சகோதர, சகோதரிகள், மாமி, மைத்துனர், மைத்துனிகள், உறவினர், நண்பர்கள்

சிவன்கோவிலடி,
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

## நீத்தார் பட்டியல்

### தம்பிப்பிள்ளை தம்பிரத்தினம் J.P.U.M.

சுன்னாகம் சட்டத்தரணி, மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதில் நீதிவான் திரு. த. தம்பிரத்தினம் J.P.U.M. காலமானார். அன்னார் முன்னாள் இராமநாதன் கல்லூரி ஆசிரியை காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், பேராதனை ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரி பயிற்சியாளர் வசந்தி, இளங்கோவன் (U,K.), அசோகன், கௌரி, மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற Dr. த. தம்பிநாயகம் (மலேசியா) முன்னாள் கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரனின் சகோதரனுமாவர்,

ஈமச்சடங்குகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு இன்று (31-3-86) பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்

தகவல்: த. அசோகன்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட் 207 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 31-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60 N 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org